வயிற்றுக்குள் இவ்வளவு எண்ணிக்கையிலான கூர்மையான பொருட்கள் இருந்தது மிகவும் சவாலான மற்றும் அரிய வழக்கு என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். அறுவை சிகிச்சைக்குப் பின் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த பிரித்திக் ரோஷன், உடல்நிலை தேறியதைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை வீடு திரும்பினார்.

தோழமைக் கட்சிகளைப் புண்படுத்தாத வகையில் அரசு செயல்பட வேண்டும்: திருமாவளவன் வேண்டுகோள்

சென்னை, ஆக. 30–

தோழமைக் கட்சிகளைப் புண்படுத்தாத வகையில் அரசு செயல்பட வேண்டும் என்று விசிக தலைவர் திருமாவளவன் கூறினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்.பி. திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

கொள்கைவிளக்கக்குறிப்பேடுகளில் வழக்கமாக இடம்பெறும் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் மற்றும் பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற மாபெரும் தலைவர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளது இது உள்ளக்கத்தோடு நடந்துள்ளதா என கேள்வி எழுகிறது. இதற்குப் பொறுப்புள்ள அதிகாரிகளும், அமைச்சர்களும் உரிய விளக்கத்தை அளிப்பார்கள் என்று நம்புகிறேன். இனி வரும் காலங்களில் அது போன்ற பிழைகள் நடைபெறாத வகையில் பார்த்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன் என்று தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளதே என்ற கேள்விக்கு, "அது ஏற்புடையதல்ல இதுவரை வழங்கி வந்த பாதுகாப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அதிகாரிகள் மீது நடவடிக்கை

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரையும், எஸ்எஃப்ஐ உள்ளிட்ட மாணவர் அமைப்பினரையும் அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட அதிகாரிகள் மீதான அரசின் நடவடிக்கை மென்மையாக இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு, ''இது குறித்து ஏற்கெனவே எனது கருத்தை கூறியுள்ளேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்துள்ள விமர்சனங்களையும், கோரிக்கைகளையும் விடுதலை சிறுத்தைகள் கட்சி அப்படியே வழிமொழிகிறது. இந்த அணுகுமுறையும் ஏற்புடையதல்ல. முதல்வர் இதில் நேரடியாகத் தலையிட வேண்டும். தோழமைக் கட்சிகளைப் புண்படுத்தாத வகையில் அரசு செயல்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்".

திமுக ஆட்சிக் காலத்தில் தலித் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதாக, பாதிக்கப்பட்டுள்ளதாக சட்டப்பேரவையில் அமைச்சர் வன்னி அரசு பேசியதற்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறித்த கேள்விக்கு, "எதுவும் செய்யவில்லை என்று சொல்லவில்லை. திரித்துப் பேசக்கூடாது. பொதுத் தொகுதிகளில் தலித்துகளை நிற்க வைத்து வெற்றி பெறச் செய்தோம் என கூறினார்கள் அது உண்மைதான். பொதுத்தொகுதிகளில் நிற்க வைப்பது இயல்பான ஒன்றுதான். தலித்துகள் 234 தொகுதிகளிலும் போட்டியிட முடியும். ஆனால், தலித் அல்லாதவர்கள் தனித் தொகுதிகளில் போட்டியிட முடியாது. அது சட்டப்படி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பொதுத் தொகுதிகளில் தலித்துகளை நிறுத்துவதை ஏதோ அவர்களுக்கு பரிதாபப்பட்டு நிறுத்தினீர்களா அல்லது தகுதியானவர் அடிப்படையில் நிறுத்தினீர்களா என வன்னி அரசு கேள்வி எழுப்பி உள்ளார். வன்னி அரசு தவறாக பேசினார் என்று கேள்வி எழுப்பி உள்ளனர். தலித்துகளை பொது தொகுதிகளில் நிறுத்துவது இரக்கப்பட்டு செய்வது போல என்று சொல்லக்கூடாது" என்று தெரிவித்தார்.

முட்டுக்கட்டை

தவெக அரசு இந்த ஐந்து ஆண்டுகளில் தலித்துகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்கு,"தவெக தலைமையிலான இந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தலித் மக்களுக்கு இன்னும் பல சட்டப்பூர்வ உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன. குறிப்பாக, வன்கொடுமை தடுப்புச் சட்டம் இந்தியா முழுவதும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படும் என்ற அதிகாரிகளின் கருத்துக்களால் பல நல்ல திட்டங்கள் முடங்குகின்றன. ஆட்சியாளர்கள் விரும்பினாலும் அதிகாரிகள் சில இடங்களில் முட்டுக்கட்டை போடுகின்றனர். தற்போதைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தோழமைக் கட்சியாக, தலித் மக்களின் மேம்பாட்டிற்காக அரசு செய்ய வேண்டிய அவசியமான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை அவ்வப்போது சுட்டிக்காட்டியும், கோரிக்கைகளை வலியுறுத்தியும் உரிய தீர்வுகளைப் பெற விசிக தொடர்ந்து குரல் கொடுக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நேபாள பெருவெள்ளம்: உயிரிழப்பு 734ஆக அதிகரிப்பு

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சப்படுகிறது. மாயமானவர்களில் தமிழர்கள் உள்பட 167 இந்தியர்களும் அடங்கியிருப்பதால் இந்தியாவிலும் தொடர்ந்து சோகம் நிலவி வருகிறது.

4,451 பேர் மீட்பு

இதற்கிடையே வெள்ளம் பாதித்த பகுதிகளில் 5வது நாளாக இன்றும் முழு வீச்சில் மீட்புப்பணிகள் நடந்து வருகிறது. இரவுபகலாக நடந்து வரும் இந்த மீட்புப்பணிகளில் நேபாள ராணுவத்தினர் 5 ஆயிரம் பேர் உள்பட 11 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு நிபுணர்களும் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் நேற்று வரை 4,451 பேரை மீட்டுள்ளனர்.

மீட்பு பணி பாதிப்பு

இந்நிலையில் போட்டேகோஷி ஆற்றில் நீர்மட்டம் மீண்டும் உயர்ந்ததைத் தொடர்ந்து, மீட்பு பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் மீட்புக் குழுக்களை விழிப்புடன் இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். இமயமலை எல்லைப் பகுதியிலிருந்து தெற்கு நோக்கிப் பாயும் இந்த ஆறு, கடந்த புதன்கிழமை ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின்போது பெருமளவிலான நீரை மத்திய நேபாளப் பகுதிக்குக் கொண்டு சென்றது. இந்நிலையில் நேபாள சுரங்கங்களில் 100க்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ளனர் என்றும், 100க்கும் மேற்பட்ட நீர்மின் பணியாளர்களும் சிக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவும், சீனாவும் சிறப்பு மீட்புக் குழுக்களை அங்கு அனுப்பியுள்ளன. மறுசீரமைப்பு மற்றும் பேரிடர் மீட்புப் பணிகளுக்கு பில்லியன் கணக்கில் செலவாகும் என நேபாளம் கருதுகிறது. இதனால் சர்வதேச ஆதரவையும் நாடுகிறது.

வெளிநாடுகள் உதவி

இதனிடையே பனிப்பாறை கண்காணிப்பை இந்தியா தீவிரப்படுத்தி உள்ளது. பனிப்பாறை சரிவுடன் இந்த பேரிடர் தொடர்புபடுத்தப்பட்டதை அடுத்து, உத்தரகாண்ட் இமயமலைப் பனிப்பாறைகளையும் பனிப்பாறை ஏரிகளையும் கண்காணித்து வருகிறது. நேபாளத்திற்கு உலகளாவிய உதவிகள் குவிந்து வருகின்றன. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச வனத்துறை ஆகியவை மனிதாபிமான உதவிகளுக்காக மில்லியன் கணக்கில் வழங்குவதாக உறுதியளித்துள்ளன. அதே நேரத்தில் சீனாவும் உதவி வழங்க முன்வந்துள்ளது.

கேளம்பாக்கம் சுடுகாட்டில் ரவுடி வெட்டிக் கொலை

சென்னை, ஆக. 30–

சுடுகாட்டில் ரவுடியை வெட்டி கொலை செய்த மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

சென்னை கேளம்பாக்கம் பகுதியில் உள்ள சுடுகாட்டில் ஒருவரின் சடலம் ரத்த வெள்ளத்தில் கிடந்தது. இதனை அந்த வழியே சென்றவர் பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். தகவலறிந்த கேளம்பாக்கம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று இறந்து கிடந்த நபரின் வெட்டு காயங்களை பார்த்ததும் வெட்டி கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. மேலும், கொலை செய்யப்பட்டவர் யார் என்பது குறித்து விசாரணை செய்தனர். அப்போது அவர் ரவுடி சாஹுல் ஹமீது (வயது 29) என்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். கொலை செய்யப்பட்ட நபர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் இருப்பதால் இந்த கொலை முன்விரோதம் காரணமாக நடந்ததா என்ற கோணத்தில் போலீசார் விசாரணை செய்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

பஞ்சாப் ஆம் ஆத்மி தலைவர் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை


பெரோஸ்பூர், ஆக. 30–

பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் குர்பிரீத் சிங் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாபின் ஃபெரோஸ்பூர் மாவட்டத்தில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் குர்பிரீத் சிங் (என்ற) கோபி, ஆயுதம் ஏந்திய 4 பேரால் சுட்டுக்கொல்லப்பட்டார். தேர்தல் தொடர்பாக ஏற்பட்ட தகராறே இந்த கொலைக்கு காரணம் என்று போலீஸார் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை மாலை, மாம்டோட் பகுதியின் முக்கிய சந்தைப் பகுதியில், காரில் வந்த நான்கு பேர் தங்கள் வாகனத்தை விட்டு இறங்கி, இருசக்கர வாகத்தில் சென்றுகொண்டிருந்த 45 வயதான சிங் மற்றும் ஹர்பிரீத் (எ) ஹாப்பி (22) ஆகியோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். பாதிக்கப்பட்டவர்கள் காரில் இருந்ததாக ஆரம்பக்கட்டத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

தகவல் அறிந்த வட்டாரங்களின்படி, ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்தவரும் மாம்டோட் நகர் பஞ்சாயத்தின் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவருமான விக்கி மைனி, ஒரு தனி காரில் சிங்கைப் பின்தொடர்ந்து சென்றுள்ளார். ஆனால் அவரும் தாக்குதலுக்கு உள்ளானார். இருப்பினும்



அவர் காயமின்றித் தப்பினார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் மருத்துவமனைக்குக் கொண்டு வரும்போதே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அதேவேளையில், ஹர்பிரீத் மேல் சிகிச்சைக்காக லூதியானாவில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களைப் பிடிக்கக் போலீஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மூத்த காவல் கண்காணிப்பாளர் பூபிந்தர் சிங் தெரிவித்தார். சமீபத்திய நகராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான தனிப்பட்ட விரோதத்தின் காரணமாகவே இந்தக் கொலை நடந்துள்ளதாக அவர் கூறினார்.

தரணி ஃபைனான்ஸ் லிமிடெட்
CIN: L65191TN1990PLC019152
பதிவு அலுவலகம்: " PGP ஹவுஸ்" புதிய எண்.59 (பழைய எண்.57), ஸ்டெர்லிங் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600034. போன்: 044-2831 1313, இணையதளம் : www.dharanifinance.com | e-mail: secretarial@dharanifinance.com

நிறுவனத்தின் 36வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு

நிறுவனத்தின் **36வது ஆண்டுப் பொதுக் கூட்டம்** (AGM) **23 செப்பம்பர் 2026 புதன்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொளிக் காட்சி (VC) / பிற ஒலி ஒளிக் காட்சிகள் (OAVM) மூலம் நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தால் (MCA) வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கை எண் 03/2025, 19 செப்டம்பர் 2004 தேதியிட்ட 09/2024 மற்றும் 25 செப்டம்பர் 2023 தேதியிட்ட எண் 09/2023 மற்றும் 03 அக்டோபர் 2024 தேதியிட்ட SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 மற்றும் SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 செபியால் அக்டோபர் 7, 2023 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" எனக் குறிப்பிடப்படும்), நிறுவனங்கள் தங்கள் உறுப்பினர்களின் நேரடிப் பங்கேற்பு இல்லாமலோ அல்லது ஒரு பொதுவான இடத்தில் இல்லாமலோ காணொளிக் காட்சி (VC) மூலம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை (AGM) நடத்த அனுமதிக்கப்படுகின்றன. எனவே, சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் 36வது ஆண்டுப் பொதுக் கூட்டம் காணொளிக் காட்சி (VC) /மூபிற ஒலிஒளி காட்சி மூலம் (OAVM) நடத்தப்படுகிறது. 36வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான உத்தேசிக்கப்பட்ட இடம் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமாக இருக்கும். மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 2025-26 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அடங்கிய ஆண்டு அறிக்கை, 36வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்புடன் சேர்த்து, நிறுவனம்/டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்) (DPs') உடன் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.dharanifinance.com லும் கிடைக்கின்றன. இந்த அறிவிப்பை பங்குச் சந்தைகளின் இணையதளங்களான BSE லிமிடெட் (www.bseindia com) மூலமாகவும் அனுகலாம்.

நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு, **செப்டம்பர் 17, 2026** முதல் **செப்டம்பர் 23, 2026** வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

36வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் மீது வாக்களிக்கும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் ஆண்டு பொதுகூட்டத்தில் நடைபெறும் மின்னணு வாக்குப்பதிவு வசதி மற்றும் மின்னணு வாக்களிப்பு முறையை செயல்படுத்துவதற்காக CDSL நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது என அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர்கள் 36வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் செப்டம்பர் 23 2026 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளிக் காட்சி (VC) மற்றும் பிற ஒலிஒளி காட்சிகள் (OAVM) மூலம் கலந்து கொள்ளலாம். 36வது ஆண்டு பொதுக் கூட்ட அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பார்க்கவும்.

செப்டம்பர் 18, 2026 என்ற கட்-ஆப் தேதியின்படி நிறுவனங்களால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேட்டிலோ அல்லது ஆண்டு பொது கூட்டத்தில் வாக்களிக்க தகுதி பெறுவார்கள். ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி மற்றும் மின்னணு வாக்களிப்பு முறையைச் செயல்படுத்துவதற்காக CDSL நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு **ஞாயிற்றுக்கிழமை, 20 செப்டம்பர் 2026 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி செவ்வாய்க்கிழமை, 22 செப்டம்பர் 2026 அன்று மாலை 05.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடையும்**, 2026 செப்டம்பர் 22 அன்று மாலை 05.00 (இந்திய நேரப்படி) மணிக்கு மேல் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் ஒரு தீர்மானத்தின் மீதான வாக்கை உறுப்பினர் ஒருமுறை அளித்துவிட்டால், பின்னர் அந்த வாக்கை மாற்ற அவருக்கு அனுமதி இல்லை 36வது ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பார்க்கவும்.

முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் காணொளி காட்சி (VC) மற்றும் ஒளிஒலி வாக்களிப்பு (OAVM) மூலம் ஆண்டு பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். ஆனால் அவர்கள் மீண்டும் வாக்களிக்கத் தகுதி பெறமாட்டார்கள். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க மற்றும் காணொளி காட்சி (VC/OAVM) வழியாக ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு முலம் வாக்களிக்கத் தகுதி பெறுவார்கள்.

தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள் www.investors.comeoindia.com என்ற இணையதளத்திற்குச் சென்று, டெபாசிட்டரி பங்கேற்பாளர் (கள்) மூலம் மின்னணு வடிவில் வைத்துள்ள பங்குகளுக்கும், பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் (RTA) காகித வடிவில் வைத்துள்ள பங்குகளுக்கும் தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர் குழு மின்னணு வாக்குப்பதிவு செயல்முறையை நேர்மையாகவும் வெளிப் படையாகவும் நடத்துவதற்கான சரிபார்ப்பாளராக சென்னையை சேர்ந்த தொழில் முறை நிறுவனச் செயலாளர்களான M/s. பங்கஜ் மேத்தா & அசோசியேட்ஸ் நிறுவனத்தை நியமித்தது.

மின்னணு வாக்கெடுப்பின் முடிவுகள், ஆண்டுப் பொதுக் கூட்டம் முடிவடைந்த இரண்டு வேலை நாட்களுக்குள் நிறுவனத்தால் அறிவிக்கப்படும் மேலும் பங்குச் சந்தைகளுக்கும் தெரிவிக்கப்படும்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின்படி,
தரணி ஃபைனான்ஸ் லிமிடெட்க்காக
முருகவேல் ராமசாமி
நிர்வாக இயக்குநர்
DIN: 10693633

இடம் : சென்னை
தேதி : 29-08-2026

கோதி பிளாஸ்கான் (இந்தியா) லிமிடெட்
CIN :L45400PY1994PLC008380
பதிவு அலுவலகம் : 17/5B,1A , வழுதவூர் ரோடு,
விவசாய ஆராய்ச்சி மையம் எதிரில், குரும்பபேட்டை, புதுச்சேரி 605009
Website :www.gothiplascon.com, e-mail : plascon747@gmail.com, Phone : 0413 – 2271151

1. எங்களது முந்தைய பத்திரிக்கை விளம்பரத்தின் தொடர்ச்சியாக, கோதி பிளாஸ்கான் (இந்தியா) லிமிடெட் ("நிறுவனம்")–ன் 31வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM), 2026 செப்டம்பர் 30, புதன்கிழமை காலை 11:00 மணிக்கு (IST) காணொளி காட்சி (VC) / பிற ஆடியோ–காட்சி வழிமுறைகள் (OAVM) மூலமாக நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகள், இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ("Listing Regulations"), கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தால் (MCA) அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்க, பங்குதாரர்கள் ஒரே இடத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளாமல், AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை மேற்கொள்வதற்காக இக்கூட்டம் நடைபெறும்.
2. MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 31வது AGM அறிவிப்பு மற்றும் 2025–26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை, நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர்கள் (RTA) / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் (DPs) தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் 28/08/2026, வெள்ளிக்கிழமை அன்று மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், பட்டியலிடல் விதிமுறைகளின் 36(1)(b) விதிக்கு இணங்க, RTA மற்றும்/அல்லது DPs–இடம் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத பங்குதாரர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிகளுக்கு, வருடாந்திர அறிக்கையை அணுகுவதற்கான நிறுவனத்தின் இணையதள இணைப்பு (சரியான பாதையுடன்) அடங்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.
3. மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், தங்களது மின்னஞ்சல் முகவரிகளை சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், காகித முறையில் (Physical mode) பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனத்தின் RTA–விடம் murali@cameoindia.com என்ற மின்னஞ்சல் மூலம் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
4. 2025–26 நிதியாண்டிற்கான AGM அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான www.gothiplascon.com–ல் கிடைக்கும். மேலும், இந்த அறிவிப்பை பங்குச் சந்தைகளின் இணையதளமான பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் AGM–ன் போது தொலைதூர மின்னணு–வாக்களிப்பு (Remote e-Voting) மற்றும் மின்னணு–வாக்களிப்பு வசதியை வழங்கும் முகமையான CDSL–ன் இணையதளமான www.evotingindia.com ஆகியவற்றிலும் அணுகலாம்.
5. AGM–ஐ நடத்துவதற்கும், AGM–க்கு முன்னதாக மற்றும் AGM–ன் போது தொலைதூர மின்னணு–வாக்களிப்பு மற்றும் மின்னணு–வாக்களிப்பு வசதிகளை வழங்குவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட முகமையாக CDSL–ன் சேவைகளை நிறுவனம் ஈடுபடுத்தியுள்ளது. காகித வடிவிலோ அல்லது மின்னணு வடிவிலோ பங்குகளை வைத்திருக்கும் நிறுவனத்தின் உறுப்பினர்கள், மற்றும் 2026 செப்டம்பர் 23 புதன்கிழமை ("கட்–ஆஃப் தேதி / Cut-off date") அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர் உள்ளவர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு–வாக்களிப்பு மூலமாகவோ அல்லது AGM–ன் போது மின்னணு–வாக்களிப்பு மூலமாகவோ வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
6. நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்றப் புத்தகங்கள் 24/08/2026 முதல் 30/09/2026 வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும். தொலைதூர மின்னணு–வாக்களிப்பு அல்லது AGM–ல் மின்னணு–வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் தகுதியை தீர்மானிப்பதற்கான கட்–ஆஃப் தேதி 23/09/2026 ஆகும்.
7. VC/OAVM வசதி மூலம் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள், சட்டத்தின் 103–வது பிரிவின் கீழ் கூட்டத்திற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு (Quorum) கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.
8. தொலைதூர மின்னணு–வாக்களிப்பு (remote e-Voting) தொடர்பான கீழ்க்கண்ட விவரங்களை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம்:

தொலைதூர மின்னணு– வாக்களிப்பு (remote e– Voting) தொடங்கும் நேரம்:	**செப்டம்பர் 27, 2026, ஞாயிற்றுக்கிழமை, காலை 9:00 மணி (IST) முதல்**
தொலைதூர மின்னணு– வாக்களிப்பு முடிவடையும் நேரம்	**செப்டம்பர் 29, 2026, செவ்வாய்க்கிழமை, மாலை 5:00 மணி (IST) வரை**

9. தொலைதூர மின்னணு–வாக்களிப்பு காலம் முடிவடைந்தவுடன், CDSL மூலம் தொலைதூர மின்னணு–வாக்களிப்பு தொகுதி முடக்கப்படும், மேலும் குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு பங்குதாரர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் ஒருமுறை வாக்களித்துவிட்டால், அதனைப் பின்னர் மாற்ற அவர் அனுமதிக்கப்பட மாட்டார். மேலும், AGM–க்கு முன்னதாக தொலைதூர மின்னணு–வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத மற்றும் AGM–ல் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுக்காக, AGM–ன் போது மின்னணு–வாக்களிப்பு வசதி செய்து தரப்படும். மின்னணு–வாக்களிப்புக்கான விரிவான வழிமுறைகள் AGM அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.
10. கட்–ஆஃப் தேதியின்படி உள்ள உறுப்பினர்கள், AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி VC/OAVM வசதி மூலம் AGM–ல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தொலைதூர மின்னணு–வாக்களிப்பு மூலம் தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்திய பிறகும் உறுப்பினர்கள் AGM–ல் பங்கேற்று கலந்துகொள்ளலாம், ஆனால் AGM–ன் போது மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். AGM அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்–ஆஃப் தேதியன்று பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், மேற்கூறிய இணையதளங்களில் இருந்து AGM அறிவிப்பை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தொலைதூர மின்னணு–வாக்களிப்பு / VC மூலம் AGM–ல் கலந்துகொள்வது / AGM–ல் மின்னணு–வாக்களிப்பு செய்வதற்கான நடைமுறையைப் பின்பற்றலாம்.
11. தொலைதூர மின்னணு–வாக்களிப்பு / மின்னணு–வாக்களிப்பு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்ய, பயிற்சி செய்யும் கம்பெனி செக்ரட்டரி திரு. N.K. பன்சாலி (உறுப்பினர் எண். FCS 3942) அவர்களை ஆய்வாளராக (Scrutinizer) வாரியம் நியமித்துள்ளது.
12. டீமேட் (demat) / காகித (physical) முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்களது PAN, மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண், வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் வாரிசுதாரர் (nomination) விவரங்களை RTA / சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் பதிவு செய்ய / புதுப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
13. மின்னணு–வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் மற்றும்/அல்லது குறைகள் இருப்பின், பங்குதாரர்கள் www.evotingindia.com என்ற CDSL இணையதளத்தின் உதவிப் பிரிவில் (help section) உள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை (FAQs) பார்க்கலாம். மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி தொடர்பான அனைத்து குறைகளையும் திரு. ராகேஷ் தல்வி, மூத்த மேலாளர், (CDSL) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், A விங், 25–வது தளம், மாரத்தான் ஃபியூச்சரெக்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், N M ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 என்ற முகவரிக்குத் தெரிவிக்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 18002109911 என்ற கட்டணமில்லா எண்ணிற்குத் தொடர்பு கொள்ளலாம்.

குழுவின் சார்பாக
ஒப்பம்/– சஞ்சய் கோதி
(DIN 00600357)
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி: 22/08/2026

ராசி எலக்ட்ரோட்ஸ் லிமிடெட்
CIN: L52599TN1994PLC026980
பதிவு அலுவலகம் : பிளாட் ஏ—14, 3வது மாடி, ராம்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், 21, ராஜா அண்ணாமலை சாலை, புரசைவாக்கம், சென்னை 600 084

காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சிகள் (OAVC) மூலம் நடைபெறும் 32வது வருடாந்திர பொதுக் கூட்டம் தொடர்பான பொது அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்:

1. நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் (MCA) மற்றும் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆகியவற்றால் வெளியிடப்பட்ட பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் 32–வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM), 2026 செப்டம்பர் 28, திங்கட்கிழமை காலை 9:30 மணிக்கு காணொளி காட்சி ("VC") மற்றும் பிற ஆடியோ–காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலம் நடத்த நிறுவனம் உத்தேசித்துள்ளது.
2. இந்தப் பொது அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து குறைந்தபட்சம் மூன்று நாட்களுக்குப் பிறகு, 32–வது AGM அறிவிப்பு மற்றும் 2025–2026–ஆம் ஆண்டிற்கான 32–வது வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை தனது அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்ப நிறுவனம் உத்தேசித்துள்ளது. 32–வது AGM அறிவிப்பு மற்றும் 32–வது வருடாந்திர அறிக்கை (2025–2026) ஆகியவற்றை பங்குச் சந்தையின் இணையதளமான www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.rasielectrodes.com ஆகியவற்றிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. மின்னணு (electronic) முறையில் பங்குகளை வைத்திருக்கும் மற்றும் தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத / புதுப்பிக்காத பங்குதாரர்கள், தங்களது டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் (Depository Participant) தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனைப் பதிவு செய்ய / புதுப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
4. காகித (physical) முறையில் பங்குகளை வைத்திருக்கும் மற்றும் தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத / புதுப்பிக்காத பங்குதாரர்கள், தங்களது மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண் மற்றும் போலியோ (folio) தொடர்பான பிற விவரங்களைப் பதிவு செய்ய, நிறுவனத்தின் RTA–விற்கு investor@cameoindia.com என்ற முகவரியில் மின்னஞ்சல் அனுப்புமாறும் அல்லது https://investors.cameoindia.com/ என்ற வலைத்தளத் தொகுதியைப் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
5. காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் கவனத்திற்கு: பிப்ரவரி 06, 2026 நாளிட்ட SEBI–இன் முதன்மை சுற்றறிக்கை (Master Circular) HO/38/13/(4)2026–MIRSD–POD/I/4298/2026–ன் படி, பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் அனைத்து பங்குதாரர்களும் தங்களது PAN மற்றும் KYC விவரங்களை (PIN குறியீட்டுடன் கூடிய அஞ்சல் முகவரி, மொபைல் எண், வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் மாதிரி கையொப்பம்) சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சுப்பிரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை – 600002 என்ற முகவரியில் உள்ள எங்களது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA), கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (Cameo Corporate Services Ltd.), காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குதாரருக்கும் தனித்தனி கடிதங்களை அனுப்பியுள்ளது. பங்குதாரர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைச் சரிபார்க்கவும், மேலும் ஏதேனும் மாற்றங்கள் தேவைப்பட்டால் / முழுமையடையாத தகவல்கள் இருப்பின், அந்த கட்டாயத் தேவைகளைப் புதுப்பிக்க / முழுமைப்படுத்த இக்கடிதம் கிடைத்தவுடன் உடனடியாக நேரில் (hand delivery), தபால் அல்லது கூரியர் மூலம் தேவையான ஆவணங்கள் / விவரங்களை எங்களது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் (RTA) சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
6. மேற்கண்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்புத் தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு மின்னணு வாக்களிப்பு (Electronic Voting) மூலம் நடைபெறும். EVSN எண். 260817015–ன் கீழ் மின்னணு–வாக்களிப்பு வசதியை வழங்க சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்துடன் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இதனை அவர்களின் இணையதளமான www.evotingindia.com–ல் அணுகலாம்.
7. மின்னணு முறையிலான வாக்களிப்பு 2026 செப்டம்பர் 24, வியாழக்கிழமை காலை 10.00 மணிக்குத் தொடங்கும்.
8. மின்னணு முறையிலான வாக்களிப்பு 2026 செப்டம்பர் 27, ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு முடிவடையும்.
9. மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்பட மாட்டாது.
10. கூட்டத் தேதிக்கு முன்பே வாக்களித்த பங்குதாரர்களுக்குக் கூட்டம் நடைபெறும் இடத்தில் வாக்களிக்க உரிமை இல்லை. இருப்பினும், அவர்கள் 32–வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் (AGM) கலந்து கொண்டு பங்கேற்கலாம்.
11. உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்ட (AGM) அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குறிப்புகளையும், குறிப்பாக VC / OAVC மூலம் AGM–இல் இணைவதற்கான மற்றும் தொலைதூர மின்–வாக்களிப்பு (remote e-voting) மூலம் தங்களது வாக்குகளைப் பதிவு செய்வதற்கான வழிமுறைகளை கவனமாகப் படிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
12. 32–வது AGM–இல் அறிவிக்கப்படும் ஈவுத்தொகை (Dividend) அக்டோபர் 27, 2026 அன்று அல்லது அதற்கு முன்பாக வழங்கப்படும். செப்டம்பர் 21, 2026 கட்–ஆஃப் தேதியன்று டெபாசிட்டரிகளால் வழங்கப்பட்ட பயனாளர்களின் நிலவரப்படி, 32–வது AGM நடைபெறும் தேதியில் உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர் உள்ள பங்குதாரர்கள், 32–வது AGM–ல் அறிவிக்கப்பட்ட ஈவுத்தொகையைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். தயவுசெய்து கீழ்க்கண்டவற்றைக் கவனத்தில் கொள்ளவும்:
    i. உங்களிடமிருந்து PAN மற்றும் KYC ஆவணங்கள் பெறப்படும் வரை, உங்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு சேவை கோரிக்கைகளையும் அல்லது புகார்களையும் RTA பரிசீலிக்காது.
    ii. SEBI–இன் முதன்மை சுற்றறிக்கையின்படி (Master Circular), காகித முறையில் (physical mode) உள்ள பங்குகளுக்கு 01.04.2024 முதல் மின்னணு முறையில் மட்டுமே ஈவுத்தொகை செலுத்தப்படும். எனவே, உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் கோரப்பட்டபடி, PAN மற்றும் KYC ஆவணங்களை எங்களது RTA–விடம் கூடிய விரைவில் சமர்ப்பிக்கவும்.
13. AGM–ல் பங்கேற்பது மற்றும் மின்னணு வாக்களிப்பு தொடர்பான குறைகளைத் தீர்ப்பதற்குப் பொறுப்பான நபரின் தொடர்பு விவரங்கள்:
திருமதி. ஜக்ருதி ஜெயின், நிறுவனச் செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி
ராசி எலக்ட்ரோட்ஸ் லிமிடெட்
நிர்வாக அலுவலகம்: A–14, ராம்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், 21,
ராஜா அண்ணாமலை சாலை, சென்னை – 600 084.
தொலைபேசி (PHONE): 044–26424523; 044–26427884;
மின்னஞ்சல் (EMAIL): info@rasielectrodes.com

ராசி எலக்ட்ரோட்ஸ் லிமிடெட்டுக்காக
B. பொபட்லால் கோத்தாரி
நிர்வாக இயக்குனர்
DIN 00594168

இடம்: சென்னை
தேதி: 29.08.2026